1993 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம், ராமசாமி படையாச்சியார் மாவட்டம், விக்கிரவாண்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட சொந்தமான இடம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அப்படி சொந்தமாக இடவசதி இருக்கின்றபட்சத்தில், இந்தத் திட்டம் பயன்தக்கதாய் அமையபெறும் என்றால் மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய பரிந்துரையின்பேரில், நகர் ஊரமைப்பு இயக்குநரின் மூலம் இதை பரிசீலனை செய்யவேண்டிய நிலை இருக்கிறது. அந்த அளவிலே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் உதவி வழங்கி, நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுடைய ஒப்புதல் பெறப்பட்டு பிறகுதான் இத்திட்டத்தை செயல்படுத்த முடியும். அரசு இதைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 36, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

36—

இடையாறு அருந்ததியர் இடுகாட்டு பாதை ஆக்கிரமிப்பை

---

*1010—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் தாலுகா, நன்செய் இடையாறு கிராம அருந்ததியர் இடுகாட்டிற்குச் செல்லும் பாதை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பரமத்தி வேலூர் வட்டம், நன்செய் இடையார் கிராமம் ச. நெ. 58/2, 53/2, 33/4, 34/3 மற்றும் இடும்பன்குளம் கிராமம் ச.நெ. 428/3, 449 ஆகிய

புலங்களில் செய்யப்பட்டுள்ள சிறு சிறு ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் தற்போது முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற எவிக்சன் பண்ணுவதற்கு வட்டாட்சியர் வருகின்ற நேரத்தில் அங்கு சிலர் பட்டாக்கள் வாங்கி வைத்திருக்கின்றோம் என்று ஆட்சேபணை தெரிவித்ததால் அந்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆதி திராவிடர்கள் சடலத்தை கையால்தான் எடுத்துச்செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வருவாய்த்துறையில் நடவடிக்கை எடுக்க இயலாதவாறு ஏற்கெனவே சிலர் பட்டா பெற்றுள்ளதால் அந்தப் பட்டாதாரர்களுக்கு ஈட்டுத் தொகையை ஆதி திராவிடர் நலத் துறை மூலம் தந்து, அங்கே ஒரு பீஸ் கமிட்டியை அமைத்தால்தான் அந்த நிலத்தை கையகப்படுத்த முடியும். காரணம் அங்கே வாழையும், வெற்றிலையும் பயிரிட்டுக் கொண்டு இருக்கின்ற காரணத்தினால், விலை உயர்ந்த நிலம் என்பதால் அங்கே சட்டம் ஒழுங்கு கெடக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த நிலத்திற்கு ஈட்டுத்தொகை தந்து, ஆதி திராவிடர்களின் நலனைக் காக்கின்ற அன்னையின் அரசு, அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் புரட்சித் தலைவியினுடைய அரசு விரைவில் அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நில ஆர்ஜிதம் செய்வதன் மூலம் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 37, திரு. எச். எம். ராஜூ, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

37—

சிவில் உரிமை பாதுகாப்புச் சட்டம் சிறந்த முறையில் செயல்பட பணியாளர்கள் நியமனம்.

*10821—திரு. எச். எம். ராஜூ :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் (Protection of Civil Rights Act) சிறந்த முறையில் செயல்பட, பற்றாக் குறையாக உள்ள பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்யும் குறிப்பு அரசிடம் உள்ளதா ?